# 15 பறாளை ஈஸ்வர விநாயக ஆலயம்



## அ. ஆலய அமைவிடம்

இலங்கையின் வடபால் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண நகரிலிருந்து வடமேற்கு முகமாக சுமார் பதினைந்து கிலோமீற்றர் தூரத்தில் சமுத்திரக் கரைக்குச் சமீபத்தில் தொல்புரம், சோழியபுரம் என்னும் இரு கிராமங்கள் உள்ளன. சோழியபுரம் பிற்காலத்தில் சுழிபுரம் என மருவியுள்ளதாகக் குறிப்பிடுவர். சுழிபுரம் கிராமத்தின் பறாளைப் பதியில் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.

ஊற்றுதேன் பொழில்சூழ் தென் பறாளை... எனப் பறாளை விநாயகர் பள்ளில் சின்னத்தம்பிப் புலவர் குறிப்பிடுவது போன்று இவ்வாலயத்தை நெல் வயல் நிலங்களும்,தோட்ட வயல்களும், மருது, அரசு முதலிய மரங்களும் சூழ்ந்து பசுமையளிக்கின்றன. இலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்துள்ள புராதன விநாயகர் ஆலயங்களுள் இதுவும் ஒன்றாகும். இதன் தலவிருட்சம் மருதமரமாகும்.



**தலவிருட்சம்**




**ஆலய நுழைவாயில்**

## ஆ.ஆலய வரலாறு

யாழ்ப்பாண இராச்சிய காலத்துக்கு முற்பட்ட ஆலயங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இவ்வாலயம் சோழமன்னர்களின் பிரதிநிதியாகிய திசைமழுவனெனும் சிற்றரசனது காலத்தில் பரிபாலனம் செய்யப் பெற்றதாக மரபுவழி செய்திகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும் இவ்வாலயத்தில் இந்தியாவிலிருந்து வந்த வேதாரணியம் சைவக் குருமார்களினால் விழாக்கள் நடாத்தப்பட்டதாகவும், சோழ தேசத்திலிருந்து வந்த எழுவர் தங்கள் பரிவாரங்களுடன்

பறாளை விநாயகரைத் தரிசித்துச் சென்றதாகவும் சொல்லப் படுகின்றது. இவ் வாலயம் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் உன்னத நிலையில் பேணப்பட்ட விநாயகர் ஆலயங்களில் ஒன்றாகக் காணப்பட்டது.



இலங்கையில் போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னர் பொலிவுடன் விளங்கிய இவ்வாலயத்தை போர்த்துக்கேயர் இடித்தழிக்கத் தொடங்கினர். அவ்வேளையில் காகம் ஒன்று பறந்து வந்து இடிக்க ஆயத்தமாகிய போர்த்துக்கேய அதிகாரியின் கண்ணைக் கொத்தி ஆலயத்தை இடிக்கவிடாமல் தடைசெய்தது. அதனால் அங்குள்ள பிள்ளையார் **கண்ணைக் கொத்திக் காக்கைப்பிள்ளையார்** என அழைக்கப்படுகின்றார். எனவே போர்த்துக்கேயரினால் அழிக்கப்படாது தப்பிய ஆலயங்களில் ஒன்றாக இதுவும் காணப்படுகின்றது. இந்த அற்புத வரலாற்றினை பறாளை விநாயகர் பள்ளினூடாக அறிய முடியும்.



காலத்துக்குக்காலம் புனருத்தாரணம் செய்யப்பட்ட இவ்வாலயம் பஞ்சமுகப் பிள்ளையார், இராஜராஜேஸ்வரி, வைரவர், சண்டேஸ்வரர், நவக்கிரக விநாயகர் ஆகிய மூர்த்திகளுக்குரிய பிரகார ஆலயங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அத்தோடு கிழக்கு நோக்கிய இராஜகோபுரத்துடனும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

### இ.பூசைகளும் விழாக்களும்

இவ்வாலயத்தில் தினமும் மூன்று வேளைப் பூசைகள் இடம் பெறுகின்றன. இப்பூசைகளை இந்தியாவிலிருந்து வந்த வேதாரணியம் சைவக்குருமார்களின் பரம்பரையினராலேயே நித்திய, நைமித்திய வழிபாடுகள் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவமானது ஆனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவம் வரக்கூடியவாறு பன்னிரண்டு நாட்கள் இடம் பெறுகின்றன. இவ்வாலயத்தின் இரதோற்சவம் சிறப்பானது. இங்குள்ள தேர் மிகவும் பழமை



**பழைய தேர்**



**பழையதேர் சிற்பம்**



**புதிய தேர்**

வாய்ந்தது. அது 1840ஆம் ஆண்டு ''கரிக்குருவி ஸ்தபதியார்'' என்னும் தென்னிந்திய சிற்பியால் செய்யப்பட்டதாகும் இது யாழ்ப்பாணத்தில் செய்யப்பட்ட முதலாவது சிற்பத்தேராகக் கருதப்படுகின்றது. இதில் 148 சிற்பங்கள் இடம் பெற்றிருந்தன. இத்தேர் தற்போது மிகவும் பழுதடைந்துள்ளதால் 2013ஆம் ஆண்டு முதல் புதியதேர் உருவாக்கப்பட்டு அதில் பஞ்சமுக விநாயகர் பவனிவருகின்றார்.



**தீர்த்தம்**

இவ்வாலயத்தின் தீர்த்தமாக திருவடிநிலை சமுத்திர தீர்த்தக்கரை காணப்படுகின்றது. இராமபிரானது திருவடிகள் பட்ட இடமாகையால் இத்தீர்த்தத்துக்கு இப்பெயர் வழங்கப்படலாயிற்று. ஆனி உத்தரத்தன்று இத்தீர்த்தக் கரையில் தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

ஆவணி சதுர்த்தியன்று அடியவர்கள் பாற்காவடி எடுத்துவந்து தமது பாலினை அபிசேகத்துக்கு வழங்குவர்.

பறாளை ஈஸ்வர விநாயகர் மீது இவ்வாலயச் சூழலில் வாழும் மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டு வழிபாடு செய்து வருகின்றனர். தமது வயல்களில் பெறும் அறுவடைகளை முதலில் விநாயருக்கே சமர்பிக்கின்றனர்.

**ஈ.நூல்கள்**

மிகவும் பழமைவாய்ந்த இவ்வாலயத்தின் மீது பல பிரபந்தங்களும் பாடப்பட்டுள்ளன. அவற்றுள் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்ட பறாளை விநாயகர் பள்ளு முதன்மையான பிரபந்தமாகும். அந்நூல் இத்தலத்தில் வீற்றிருந்து அருள்புரியும் பறாளை விநாயகரைப் பாட்டுடைத் தலைவராக் கொண்டு பாடப்பட்டுள்ளதாகும். சிந்து,விருத்தம்,கலிப்பா ஆகிய யாப்புக்களால் இந்நூல் பாடப்பட்டுள்ளது.



**சின்னதம்பிப் புலவர்**

**சுத்தர்பணிந் தேத்துந் சுழிபுரத்து வீற்றிருக்கும்**
**அத்த பரஞ்சோதி அண்ணலே - கைத்தலத்துச்**
**சூலந் திரித்துமுனந் தோன்றல காலமெனக்**
**காலன் வரும் போது கா.**

என்றவாறு சின்னத்தம்பிப் புலவர் பறாளை விநாயகர்பள்ளில் இவ் விநாயகரை வேண்டியுள்ளதை அவதானிக்கலாம். மேலும் கூழங்கைத் தம்பிரான், சித்தாந்த சரபம் சொக்கலிங்க தேசிகர் ஆகியோர் இவ் விநாயகர் மீது இரு பிரபந்தங்களைப் பாடியுள்ளனர்.

## பயிற்சிகள்

01. பறாளை ஈஸ்வரவிநாயகர் ஆலய மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்ஷம் என்பனவற்றைக் குறிப்பிடுக?

02. பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்தை போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்னர் பரிபாலனம் செய்தவர்கள் யாவர்?

03. பறாளை ஈஸ்வர விநாயகரது அற்புதங்களில் ஒன்றைக் குறிப்பிடுக.

04. பறாளை ஈஸ்வரவிநாயகர் ஆலயத்தின் புராதன தேரின் சிறப்புக்கள் யாவை?

05. பறாளை ஈஸ்வரவிநாயகர் ஆலயத்தின் மீது பாடப்பட்ட பள்ளு பிரபந்தத்தையும் அதன் ஆசிரியர் பெயரையும் குறிப்பிடுக.

## செயற்பாடு

★ பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயம் பற்றி இணையத்தளங்களில் வந்துள்ள செய்திகளை தரவிறக்கம் செய்து காட்சிப்படுத்தவும்

## பாடச்சுருக்கம்

★ பறாளை ஈஸ்வரவிநாயகர் ஆலயம் தலம்,மூர்த்தி தீர்த்தம் விருட்சம்.என்பன முறையே அமையப் பெற்ற ஆலயமாகும்.
★ இது தமிழரசர் காலம் தொட்டு பரிபாலனம் செய்யப் பட்டு வந்த ஆலயமாகும்.
★ போர்த்துக்கேயர் காலத்தில் இறைவனின் அற்புதத்தால் அழிவில் நின்றும் காப்பாற்றப்பட்ட ஆலயமாகும்.
★ பழமை வாய்ந்த சிற்பத்தேர் இவ்வாலயத்திலுண்டு.
★ பறாளை விநாயகர் பள்ளு இவ்வாலயத்தின் சிறப்புக்களைக் கூறும் நூலாகும்.